பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 11 வெள்ளிக்கிழமை 23.02.2024 கதிர் 108

# வடக்கில் உள்ள கடல் வளங்களை சூறையாடுகிறார் மு.க.ஸ்டாலின்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலங்கையின் வடக்குக்கடல் பகுதியில் உள்ள வளங்களைச்சூறையாடுகின்றார் என்று ஜேவிபியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எமக்குச்சொந்தமான கடல்பகுதியில் உள்ள ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் வழக்குப் பிரச்சினைகள் அனேகமாக இன்று ஒரு முக்கியமான கட்டத்தைத் தாண்டும் என்று எதிர்பார்க்கலாம். மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காது, ஆனால் மணி கட்டின



மாடு சொன்னால் கேட்கத்தானே வேண்டும். ☞ 2

## 6 மாவட்டங்களில் அதிகளவு வெப்பம்

அதிக வெப்பம் தொடர்பில் 6 மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கொழும்பு, கம்பஹா, புத்தளம், குருணாகல், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய 6 மாவட்டங்களேஅதிகவெப்பநிலையைக் கொண்டிருக்கப்போகின்றன. ☞ 8

# நாடாளுமன்ற குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

நாடாளுமன்றக் குழுக்கள் சிலவற்றுக்கு இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளபெயர்களுக்கு அமைய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தினால் 2024 பெப்ரவரி 9ஆம்திகதிநிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரில் குழுக்களில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின்பெயர்களை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

இதற்கமைய இதுவரை கிடைக்கப் பெற்ற பெயர்களுக்கு அமைய அந்தந்தக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் விபரம் வருமாறு;

ஒழுக்கவியல்மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு, சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி ஜனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ, விஜித பேருகொட, தாரக்க பாலசூரிய, அநுராத ஜயரத்ன, சமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ,மஹிந்தானந்த அலுத்கமகே, ஜயந்த கெட்டகொட, சட்டத்தரணி மதுர விதானகே, சமன்பிரிய ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச கணக்குகள் பற்றிய குழுவுக்கு சட்டத்தரணி மொஹான் ☞ 2

# அந்நியச் செலாவணியை அதிகரிக்க இரவு நேர பொருளாதாரம் அவசியம்

## இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வலியுறுத்து

அந்நியச்செலாவணி வருவாயை 70% அதிகரிக்க இரவு நேரப் பொருளாதாரத்தைஊக்குவிப்பது மிக அவசியம் என்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ☞ 8

# 18 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

## படகோட்டிக்கு 6 மாதச் சிறை

எல்லைதாண்டிமீன் பிடியில்ஈடுபட்டமைக்காக பெப்ரவரி 8 கைது செய்யப்பட்ட 18 தமிழக மீனவர்களும்விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் மீன் பிடிப் படகு அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.. படகோட்டிஒருவருக்கு6மாத காலச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப் பில் இரண்டு படகுகளு டன் எல்லை தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இந்தப் 19 தமிழக மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப் பட்டிருந்தனர்.

கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டதமிழக மீனவர்களை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள ☞ 2

# நவீன உலகத்திற்கு ஏற்றவாறு தொழில் கல்வி மறுசீரமைப்பு

## சந்தையில் வெற்றிபெறும் சூழல் உருவாக்கப்படும் என்கிறார் ரணில்

நவீன உலகிற்கு ஏற்றவாறு தொழில் கல்வியைமறுசீரமைத்து, இந்நாட்டின் இளைஞர் யுவதிகள் போட்டித் தன்மை நிறைந்த உலக தொழில் சந்தையில்வெற்றிபெறுவதற்குத் உகந்த சூழல் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

அதற்கமைய நாட்டின் அனைத்து தொழில் பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துஒரேபல்கலைக் கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதோடு, புதியவிடயப்பரப்புக்களை உள்ளடக்கிய பாடநெறிகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ☞ 2

# வியட்நாம் அமைச்சர் – பிரதமர் இடையில் நேற்றுச் சந்திப்பு

வியட்நாம் நாட்டின் விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மின் ஹோன் லீ மற்றும்பிரதமர்தினேஷ் குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது நெருக்கமான இருதரப்பு உறவுகள் மற்றும் பல துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறிப்பாக கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூகவலுவூட்டல்குறித்து விரிவாககலந்துரையாடப் பட்டுள்ளது.

வியட்நாம்விடுதலை இயக்கத்தின்போது இலங்கை வழங்கிய ஆதரவுக்கு வியட்நாம் அமைச்சர் நன்றி தெரிவித்தார். வியட்நாம் சுதந்திரம் அடைந்து ஒன்றிணைந்த பின்னர் முதலில் அங்கீகரித்த நாடுகளில்இலங்கையும் ஒன்று என்றார்.

சுதந்திரத்தின் ☞ 2

# யாழ்ப்பாணத்திற்கு புதிய துணை தூதர்

## இந்தியா நியமிப்பு



யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் புதிய துணைத் தூதராக சாய் முரளி அடுத்த வாரம் பதவியேற்கவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜின் பதவிக்காலம் எதிர்வரும்25ஆம் ☞ 2

# அரகலய போராட்ட களம் சூதாட்ட நிறுவனத்திற்கா?

## முழுப் பொய் என்கிறார் அமைச்சர் பிரசன்ன

காலி முகத் திடலில் 'அரகலய' போராட்டம் இடம்பெற்ற களத்தை கசினோ சூதாட்ட நிறுவனம் ஒன்றுக்கு அரசு குத்தகைக்குக் கொடுத்து விட்டதாகக் கூறப்படுவது வெறும் பொய் என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்விஜிதஹேரத் கடந்தசெவ்வாய்க்கிழமை (20 ஆம் திகதி) நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் நகர அபிவிருத்தி அதிகார சபை காலி முகத்திடலில் உள்ள நிலப்பகுதியை கசினோ சூதாட்டத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்,விசும்பாயே கட்டடத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க உள்ளதாகவும் இவை பிரச்சினைக்குரிய நகர்வுகள் என்று குறிப்பிட்டிருந்தார். இவரின் இந்த கருத்து முற்றிலும் பொய்யானது.

முதலீடுகளை அதிகளவில் பெற்றுக் கொள்வதற்காக 2022.11.14அமைச்சரவை கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானகாணிகளை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குவழங்கஅனுமதி வழங்கப்பட்டது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கோரிக்கைகள் 2023.01.19 நகர அபிவிருத்தி ☞ 2

# தமிழ்நாட்டிலிருந்து திரும்பிய வன்முறைச் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் புதன்கிழமை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். தமிழ்நாட்டில்இருந்துவிமானம் மூலம் யாழ்ப்பாணம் திரும்பியபோது அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபலவன்முறை சம்பவங்களுடன்தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்தவரே கைது செய்யப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியர்களின் புறக்கணிப்புக்கு மத்தியிலும் கச்சதீவு திருவிழா

## இன்று தொடங்குகின்றது

இந்திய யாத்திரிகர்களின் புறக்கணிப்புக்கு மத்தியில் இன்று கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்தத் திருவிழா தொடங்குகின்றது. நாளை காலை திருப்பலியுடன் அது நிறைவுக்கு வரும்.

எல்லை தாண்டி அத்துமீறிய மீனவர்களில் சிலருக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் இராமேஸ்வரம் மீனவர்கள் ஏற்கனவே தொழில் நிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தமது கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்த ஆண்டு கச்சதீவு திருவிழாவைப் புறக்கணிப்பதற்கும் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். இதையடுத்து கச்சதீவு திருவிழாவிற்கான ஏற்பாட்டு ஒருங்கிணைப்பைக் கவனிக்கும் அருட்தந்தை சந்தியாகு கச்சதீவுக்கான பயண ஏற்பாடுகள் அனைத்தும் கைவிடப்பட்டிருக்கின்றன என்று அறிவித்துள்ளார். பயணத்துக்காகச் செலுத்தப்பட்ட பணமும் திருப்பித் தரப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து திருவிழாவிற்காக எவரும் வரமாட்டார்கள் என்றும் சந்தியாகு இலங்கைக்கு எழுத்தில் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் இன்று கச்சதீவு திருவிழா தொடங்குகின்றது. அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆலயத்திற்கு இந்தியப் பக்தர்கள் வருகை தந்தால் அவர்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு வசதியாகத் தனி இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## இனி இது .....

கட்சியின் பிரச்சினை குறித்து இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்றுகட்சியின்புதியதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவால்தலைவராகமுடியாமல் போய்விட்டவரான சிறீதரனை அழைத்துப் பேசினார். இது பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் விடுத்த செய்திக் குறிப்பில் கட்சியின் புதிய தலைவராகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாழ்த்துத் தெரிவித்த இந்தியத் தூதுவர், கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் மூலம் நேற்றைய சந்திப்பு தமிழ் அரசுக் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பானதுதான் என்பதைநாடாளுமன்றஉறுப்பினர் சிறீதரனேஉறுதிப்படுத்தியிருக்கிறார். இன்றையதினம்கட்சியின்பழைய மத்திய குழு உறுப்பினர்கள் கூடி இந்தப் பிரச்சினை தொடர்பில் கலந்தாலோசனை நடத்தவுள்ள நிலையில், இந்தியத் தூதுவர் சிறீதரனைக்கொழும்புக்குஅழைத்து அதுபற்றிக்கலந்துரையாடியுள்ளார்.

அதற்கு ஒரு பின்னணி இருக்கின்றது. பெப்ரவரி 16 யாழ்ப்பாணத்திலிருந்த இந்தியத் தூதுவர் வடக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரைஜெட்விங்ஹோட்டலில் சந்தித்துப்பேசினார். அந்தச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சுமந்திரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். மேடைக் கலந்துரையாடல் அமைப்பிலன்றி, விருந்துபசாரக் கட்டமைப்பில் மேசைகளில் விருந்தினர்கள் 5,6 பேர் அமர்ந்திருக்க ஒவ்வொரு மேசையாக வந்து சிறிது நேரம் அமர்ந்திருந்து அவர்களின் கருத்துக்களை இந்தியத் தூதுவர் கேட்டறியும் வகையில் இந்தக் கூட்டம்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கூட்டத்தில் அதிகம் அரசியல் பேசப்படவில்லை. அந்தந்த மேசைகளில் இருந்தவர்களின் சந்தேகம் மற்றும் அரசியல் கருத்துக்கள் தூதுவருடன் பரிமாறிக்கொள்ளப்பட்டன. ஆனால் அந்தக் கூட்டம் முடிந்து எல்லோரும் புறப்பட்டபோது சுமந்திரனும் அங்கிருந்து புறப்பட ஆயத்தமானார். அப்போது இந்தியத் தூதரக அதிகாரிகள் சிலர் அவருடன்பேசிக்கொண்டிருந்தனர். சுமந்திரன் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த இந்தியத் தூதுவர் அந்தப் பேச்சில் தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டார்.

தமிழ்அரசுக்கட்சியின்உள்வீட்டு விவகாரம் குறித்துத்தான் அவர்கள் பேசினார். கட்சித் தலைவர் தேர்தல் தொடர்பில் சுமந்திரனின் தரப்புப் பார்வை என்ன என்பதைத் தூதுவர் அறிந்துகொண்டார். (சிறீதரன்தரப்புக் கதையை அவர்கள் ஏற்கனவே கேட்டிருப்பார்கள்தானே) தேர்தலில் சுமந்திரனின் தோல்விக்கான காரணங்களும் அங்கு அலசப்பட்டன. தனது தோல்வியில் இந்தியத் --தூதரகத்திற்கும் பங்கிருக்கின்றது என்பதை சுமந்திரன் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது நைசாகப் போட்டு வைப்பதற்குத் தயங்கவில்லை.

அதைப் புரிந்துகொண்ட தூதுவரும் மற்றவர்களும் பிரச்சினையை எப்படி விக்கினம் இல்லாமல் தீர்ப்பது என்பது தொடர்பில் அவரிடம் ஆலோசனை கேட்டனர். சுமந்தினர் என்ன சொல்லப் போகிறார்? அவர் ஏற்கனவே அறிக்கையில், செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியிருந்தவைகளைத்தனர் திரும்பவும் கூறி வைத்தார். நீதி மன்றத்திற்கு இந்தப் பிரச்சினை சென்றிருப்பதால், அந்த வழக்குகளை திரும்பப் பெற வைப்பதன்மூ-லமேகடந்தபொதுக் குழுவின் முடிவுகளை அமுல்படுத்தி சிறீதரனைத் தலைவராகத் தொடர்ந்து வைத்திருக்க முடியும் என்பதை விளக்கினார். அதற்கு ஜனவரி 21, 27 பொதுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அப்படியே தொடரும் என்கிற உறுதி மொழியை வழக்காளிகளுக்கு வழங்கினால் வழக்குகள் திரும்பப் பெறப்படமுடியும் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

அவரது கருத்துக்களை இந்தியத் தூதுவர் கவனமாக உள்வாங்கிக்கொண்டார். கட்சியின் தலைவராக சீறிதரனைத் தொடர்ந்தும்வைத்திருக்கவேண்டிய தேவை இந்தியாவிற்கு இருப்பதால், நீதிமன்றத்தின் மூலம் இந்த விவகாரம் இழுபறிப்படுவதையோ அல்லதுநீதிமன்றம்கட்சியின்பொதுக் குழுக் கூட்டம் செல்லுபடியாகாது என்று அறிவிப்பதையோ இந்தியா விரும்பாது. எனவேதான் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலுக்கு முன்பாக சிறீதரனைக் கொழும்பிற்கு அழைத்து இந்தியத் தூதுவர் சந்தித்துள்ளார். அதேநேரம்பெப்ரவரி 26 சுமந்திரனை மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கும் இந்தியத் தூதுவரால் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக சுமந்திரன் வருவதை இந்தியா விரும்பவில்லை என்பது வெளிப்படை.சுமந்திரனைமேற்குலக சார்பான தமிழ் ராஜதந்திரியாகவும் இந்தியாவின் சொல் பேச்சுக் கேட்காத ஒருவராகவுமே இந்தியத் தூதரகம் கணித்து வைத்துள்ளது. இருந்தாலும் சுமந்திரன் கட்சியைவிட்டு வெளியேறாமல் பார்த்-துக்கொள்வதிலும் அது அதிக அக்கறையோடு இருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியைவிட்டு சுமந்திரன் வெளியேறிச் சென்று தனியாவர்த்தனம் வாசிக்கத் தொடங்கி அது வெற்றிகரமாக நகர்ந்துவிட்டால் அது இந்தியாவுக்கு இன்னும்பாதகமாகஅமைந்துவிடும் என்று கருதுவதால் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையை, சுமந்திரனைக் கட்சிக்குள் வைத்துக்கொள்ளும் வகையில் கட்சிப் பிரச்சினையைத் தீர்க்கும்படி சிறீதரனுக்கு நேற்று அறிவுரைகள், அழுத்தங்கள் வழங்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

நான் தொடக்கத்திலேயே சொன்னது மாதிரி மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காது மணி கட்டின மாடு சொன்னால் கேட்டுத்தானே ஆகவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்களை சூறையாடுகின்றார். இது தொடர்பில் வடக்கில் உள்ள அமைச்சரும்சரிதமிழ்க்கட்சிகளும் சரி வாய்மூடி மௌனிகளாகவே இருக்கின்றார்கள்.

அவர்கள் ஏன் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியாது. எமது மீனவர்களுக்குச் சொந்தமான கடல்பரப்பில் கைவைக்க வேண்டாமென்று இந்தியாவிடம் கோரிக்கை விடுங்கள் என்று நாம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் கோரிக்கை விடுகின்றோம்.

அவ்வாறு இல்லாது விட்டால் சொற்பகாலத்தில் வடக்கு கடற்பகுதி பாலைவனமாகுவதை தடுத்து நிறுத்த முடியாது போகும். அப்போது எமது கடற்றொழிலாளர்கள் நிர்கதியற்று போவார்கள் என்பதை எச்சரிக்கையுடன் கூறுகின்றோம் என்றார்.

## யாழ்ப்பாணத்திற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதியுடன் நிறைவுறும் நிலையில், அவர் டில்லிக்கு மாற்றலாகிச் செல்கிறார்.

ராகேஸின் இடத்திற்கே சாய் முரளி நியமிக்கப்பட்டுள்ளார். சாய் முரளி 1991ஆம் ஆண்டு பிறந்தவர் (வயது 33).

இவர் 2019ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சில் இணைந்து தற்போது வரை ரஷ்யாவின் மாநிலமொன்றில் இந்திய தூனதரகத்தின் கொன்ஸிலர் ஜெனரலாக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரகலய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார சபையின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கிப் பொருத்தமான முதலீடுகளை மாத்திரம் தெரிவு செய்ய உரிய வழிமுறைகளைப் பின்பற்றுமாறு அந்தக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காலி முகத்திடலில் உள்ள நிலப்பரப்பு வெளிநாட்டு முதலீடுகளுக்கு வழங்கப்படவில்லை. கொழும்பு -3 பாலதக்ச மாவத்தையில் உள்ள 1 ஏக்கர் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்ய பாலி இன்வெஸ்ட்மென்ட் தனியார்நிறுவனம்முன்வந்துள்ளது.

இதற்கமைய வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிகார சபைக்கு சொந்தமான காணியை நேரடியாக வழங்கும்போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளுக்கு அமைய 2024.02.16 புரிந்துணர்வுஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆகவே நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் முறையற்ற வகையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுவதாக முன்வைக்கும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறேன்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை, நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம் என்று மக்கள் விடுதலை முன்னணியினர் கடந்த காலங்களில் வலியுறுத்தினார்கள்.

பொருளாதார நெருக்கடி தீவிர மடைவதற்கு இதுவும் ஒரு காரணியாக இருந்தது. பொருளாதார நெருக்கடியின்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருகை தருகிறார்கள்.

முதலீடுகளை முன்னெடுக்கிறார்கள். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குதேவையானவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்தியாவில் வெளிநாட்டு முதலீட்டாள்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான நிலைக்கு நாமும் செல்லாவிடின் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முடியாது என்றார்.

## நவீன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்மலானைலலித்அத்துலத்முதலி தொழில்பயிற்சி நிலையத்திற்கு நேற்று மேற்பார்வைக்காச் சென்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

லலித் அத்துலத்முதலியின் நினைவாகஇந்நாட்டுபிள்ளைகளின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனம் தற்போது தேசிய இளைஞர் சேவை மன்றத்தின்கீழ்இயங்கிவருவதுடன் மோட்டார் இயந்திரவியல், தகவல் தொழில்நுட்பம், முப்பரிமாண வடிவமைப்பு 3னு, பாலர் பாடசாலை ஆசிரியர் பாடநெறி, நவீன தொழில்நுட்பப் பாடநெறி, அழகுக்கலை நிபுணர் பாடநெறி, மொழிப் பாடநெறிகள் உட்பட நவீன உலகிற்கு தேவையான பல்வேறு பாடநெறிகள் இங்கு நடத்தப்படுகின்றன.

பாடநெறிகள் நடத்தப்படும் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களின் நலன்புரி மற்றும் பிற நலன் தொடர்பிலான விடயங்கள் குறித்து ஜனாதிபதி மாணவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதோடு, மாணவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாகஇலங்கையின்இளைஞர் யுவதிகள் முன்னோக்கிச் செல்ல காணப்படும் வாய்ப்புகள் குறித்து இளைஞர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, தற்போது டிஜிட்டல் மாற்றத்திற்கான முன்னெடுப்புக்கள் துரிதமாக இடம்பெற்று வருவதோடு, இதன்போதுசெயற்கைநுண்ணறிவு உள்ளிட்ட துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் எனவும், நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட்பத்துடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும் எனவும் தெரிவித்தார்.

முன்பள்ளி கற்கைநெறியை மேற்கொண்டு சொந்தமாக முன்பள்ளியொன்றை நடாத்த எதிர்பார்ப்பதாகவும் அதற்கு ஒழுங்கான முறைமையொன்றை உருவாக்கித் தருமாறும் முன்பள்ளி கற்கைநெறியை கற்கும் மாணவியொருவர்விடுத்தகோரிக்கைக்குப் பதிலளித்த ஜனாதிபதி, முன்பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டத்துடன் இணைந்ததாக இந்தக் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

அதனையடுத்துதொழில்பயிற்சி நிலையத்தின் விசேட விருந்தினர்களுக்கான பதிவேட்டில் குறிப்பு இட்ட ஜனாதிபதி, மாணவர்களுடன் குழுப் புகைப்படம் எடுக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார். பின்னர்மாணவர்களுடன்சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி மாணவர்களின் செல்பி புகைப் படங்களிலும் இணைந்துகொண்டார்.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரியதர்ஷன த சில்வா, லசந்த அலகியவன்ன, பிரசன்ன ரணவீர, கே.காதர் மஸ்தான், டயனா கமகே, சாமர சம்பத் தசனாயக, வஜிர அபேவர்தன, ஏ. எல். எம். அதாஉல்லா, விமலவீர திசாநாயக்க, ஜயந்த கெட்டகொட, (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட, கருணாதாஸ கொடிதுவக்கு, இசுரு தொடன்கொட, சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த, (திருமதி) முதிதா பிரிஸான்தி, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான, சட்டத்தரணி மதுர விதானகே, டீ. வீரசிங்க? மஞ்சுலா திசாநாயக ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசபொறுப்புமுயற்சிகள்பற்றிய குழுவுக்கு, ஜகத் புஷ்பகுமார, ஜானக வக்கும்புர லொஹான் ரத்வத்தே இந்திக அனுருத்த ஹேரத் சாந்த பண்டார மஹிந்தானந்த அலுத்கமகே துமிந்த திசாநாயக்க ரோஹித அபேகுணவர்தன நிமல் லான்சா யூ.கே. சுமித் உடுகும்புர சஞ்ஜீவ எதிரிமான்ன ஜகத் குமார சுமித்ராரச்சி (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய சட்டத்தரணி பிரேம்நாத் சி. உபுல் மஹேந்திர ராஜபக்ஷ எம். ராமேஷ்வரன் ராஜிகா விக்கிரமசிங்ஹ சட்டத்தரணி மதுர விதானகே பேராசிரியர் ரஞ்சித் பண்டார பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு கலாநிதி சரத் வீரசேக்கர, சமல் ராஜபக்ச, கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட ஆகியோரும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு மஹிந்தானந்த அலுத்கமகே, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 18 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இந்த வழக்கு இன்று ஊற்காவற்றுறை நீதவான் து.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தமிழக மீனவர்கள் 19 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ஒரு படகின் உரிமையாளர் குற்றம் இடம்பெற்றபோது படகில் இருந்தமையால், அந்த படகை அரசுடைமையாக்கி நீதிவான் உத்தரவிட்டார்.

மற்றைய படகின் படகோட்டி ஜி.பி.எஸ்.கருவியை பாவித்தும் எல்லை தாண்டியமையால், அவருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டணை விதித்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

ஏனைய 18 மீனவர்களும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டளை என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## வியட்நாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், வியட்நாம் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைந்திருப்பதையிட்டு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார். வெளிநாட்டு முதலீடுகளை வெற்றிகரமாக ஈர்ப்பதற்காகவியட்நாம்கடைப்பிடித்த புதுமையான வழிமுறைகளை பாராட்டிய அவர், விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கான அனுபவத்தை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

அமைச்சர், பிரதமரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதுடன் வியட்நாம் இலங்கையை ஒரு சிறப்புநண்பராகக்கருதுவதாகவும் டிஜிட்டல்விவசாயம்மற்றும்ஸ்மார்ட் விவசாயத்தில் நிபுணத்துவத்தை தனதுநாடுபகிர்ந்துகொள்வதாகவும் கூறினார்.

பௌத்தம்மற்றும்சோசலிசத்தின் வளமானபின்னணியைக்கொண்ட இரு நாடுகளும் மக்கள் சார்ந்த அபிவிருத்திக்கு ஒரே மாதிரியான அணுகுமுறையைக்கொண்டுள்ளன என்றார். எனவே, இரு நாடுகளும் விவசாய மேம்பாட்டின் மூலம் கிராமிய அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன எனக் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# எம்.எஸ். காரியப்பர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது கமு/ஃகமு/ஃஎம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்திற்கு செவ்வாய்க்கிழமை விஜயத்தை மேற்கொண்டு தெரிவு செய்யப்பட்ட 70 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் எம். எஸ். எம். ஆரிப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஏ. ஆர். எம். மன்சூர் பௌண்டேசன் அமைப்பின் தலைவரான சட்டத்தரணி மரியம் மன்சூர் நளிமுடீன், அவரது கணவர் வைத்தியர் நளிமுடீன், அமைப்பின் செயலாளர் நிப்றாஸ் மன்சூர் மற்றும் அந்த அமைப்பின் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாடசாலை முற்றத்திலிருந்து வரவேற்ற அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவச் செல்வங்கள் அனைவரையும் மிகவும் விருப்புடனும், இன்முகத்துடனும் நலன் விசாரித்து புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, அதிபர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வு கிராத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வேளை பாடசாலை அதிபரால் ஆற்றப்பட்ட வரவேற்புரையில், மறைந்த முன்னாள் அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூரின் அளப்பரிய சேவைகள் அச்சொட்டாக நாளைய தலைவர்களான இளைய மாணவச் சமுதாயத்திற்கு தெளிவுபடுத்தியதுடன் அச்சேவைகளை அன்னாரது மகளான சட்டத்தரணி மரியம் மன்சூர் நளிமுடீன் செய்து கொண்டிருப்பதையிட்டு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

அடுத்ததாக சட்டத்தரணி மரியம் மன்சூர் நளிமுடீன் உரையாற்றிய போது, தனது தாயாரினது தகப்பனாரின் பெயரைத்தாங்கிய இப் பாடசாலைக்கும் மாணவச் செல்வங்களுக்கும் உதவி செய்யக்கிடைத்ததையிட்டு அகமகிழ்வதாகக் கூறினார். அத்தோடு, தனது தந்தை போன்ற கறைபடியாத கரங்களால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை இனிதே உவந்தளித்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர், ஆசிரியர்களால் பாடசாலையின் தலைமை நுழைவாயில் தொடர்பான மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது. பிரதி அதிபர் எம். எப். சித்தி சர்ஜ/னாவால் நன்றி உரை வழங்கப்பட்டதுடன், ஸலவாத்துடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

இதன் பின்னர் கமு/ஃகமு/ஃஎம்.எஸ். காரியப்பர் வித்தியாலய நிர்வாகக் குழுவால் திட்டமிடப்பட்டிருந்த பாடசாலையின் தலைமை நுழைவாயில் அமையப்பெற வேண்டிய இடத்தையும் பார்வையிட்டதுடன் அதனை நிச்சயமாக செய்துதருவதாக வாக்குறுதியும் வழங்கினார். எதிர்வரும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூரின் நினைவு நாளை முன்னிட்டு துஆப் பிரார்த்தனை நிகழ்வொன்றினை இப் பாடசாலையில் நடத்த வேண்டுமென்ற விருப்பத்தையும் தெரிவித்தார். (05)

# மலையகம் பற்றிய கலை, இலக்கிய நிகழ்வு யாழ்ப்பாணத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை



மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்தமையின் 200 ஆண்டுகளின் நிறைவை ஒட்டி, இலக்கியம், திரைப்படம், நடன ஆற்றுகை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு நாள் நிகழ்வு ஒன்றை கிரேஷியன் ட்ரஸ்ட் அமைப்பினர் எதிர்வரும் 25 பெப்ரவரி 2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்திலே ஏற்பாடு செய்துள்ளனர்.

மலையகத் தமிழ் மக்களின் வாழ்வியல், அனுபவங்கள், இலட்சியங்கள், போராட்டங்கள் என்பவற்றைப் பற்றிப் பேசும் இலக்கியங்கள் மற்றும் ஏனைய கலை வடிவங்கள் மீது கவனத்தைக் குவிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பிக்கும் இந்த நிகழ்ச்சியிலே மலையகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களான எஸ்தர், சந்திரலேகா கிங்ஸ்லி, சிவனு மனோகரன் தமது எழுத்துக்களில் இருந்து சில பதிவுகளை வாசிப்பர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் விசேட கலைமாணிப் படிப்பில் ஈடுபடும் மாணவி இராமச்சந்திரன் கிர்ஷிகா மறைந்த எழுத்தாளர் சி. வி. வேலுப்பிள்ளையால் எழுதப்பட்ட "சிலோனின் தேயிலை தோட்டத்தில்" என்ற நெடுங்கவிதையில் இருந்து ஒரு பகுதியினை வாசிப்பார். இந்த அமர்வினை யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் எழுதும் எழுத்தாளரான ஐயாத்துரை சாந்தன் நெறிப்படுத்துவார்.

அதனை அடுத்து மலையக மக்களின் அனுபவங்களைப் பேசும் ஒரு நடன ஆற்றுகையினை பரதநாட்டியக் கலைஞரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் போதனாசிரியருமான இராசையா தனராஜ் வழங்குவார். இந்த ஆற்றுகைக்கு அணிசெய் கலைஞர்களாக ஆனந்தகிருஸ்ணன் ஸ்ரீகாந்த் (நட்டுவாங்கம்), முரளிதரன் சுலக்ஸன் (கஞ்சிரா) ஆகியோர் பங்களிப்பர்.

அதன் பின்னர் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலே எழுதப்பட்ட இலக்கியங்களிலே மலையகத் தமிழ் சமூகம் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது என்பது பற்றிய வட்டமேசை உரையாடல் ஒன்று இடம்பெறும். இந்த உரையாடலிலே பெ. சரவணகுமார் (சிரேஸ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), சு. முரளிதரன் (மேலதிக ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்), லறீனா அப்துல் ஹக் (சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிகள் துறை, சபரகமுவ பல்கலைக்கழகம்) சிவமோகன் சுமதி (பேராசிரியர், ஆங்கிலத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோர் பங்கேற்பர். இந்த அமர்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையிலே சிரேஸ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் சாமிநாதன் விமல் நெறிப்படுத்துவார்.

பி.ப 3 மணிக்கு சிவமோகன் சுமதியின் மலையகம் பற்றிய இங்கிருந்து திரைப்படக் காட்சியும் கலந்துரையாடலும் இடம்பெறும்.

இலக்கியம், திரைப்படம், நடனம் போன்ற துறைகளிலே ஆர்வம் கொண்டோர், பொதுமக்கள் அனைவரினையும் இந்நிகழ்விலே கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைக்கிறார்கள்.

இந்த நிகழ்வுக்கு ஜோன் கீல்ஸ் ஃபவுண்டேஷண்ஸ் அனுசரணையாளர்களாகச் செயற்படுகின்றனர். (05)



# தேற்றாத்தீவு தாழ்நிலத்தில் ஒரு ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட தேற்றாத்தீவு குடியிருப்பு கிராமத்தின் வீதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது - தேற்றாத்தீவு குடியிருப்பு கிராமத்தின் தாழ் நிலத்தை அண்டியுள்ள வீதில் சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு அப்பகுதி பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய அந்த இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சடலத்தை மீட்டுள்ளனர். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தேற்றாத்தீவு குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த 84 வயதுடைய ஆறுமுகம் கிருஸ்ணபிள்ளை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி வி.தியாகேஸ்வரனின் உத்தரவுக்கமைய சடலத்தைப் பார்வையிட்ட களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம், சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தமாறு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இடை நடுவில் கைவிடப்பட்ட வடசல் பாலம் போக்குவரத்துச் செய்வதில் பிரச்சினைகள்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட பூவரசந்தீவையும் - கல்லடி வெட்டு வானையும் இணைக்கும் வடசல்பாலம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இதனால் அப்பிரதேச மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

2021.10.16 ஆம் திகதி அன்று இப்பாலத்துக்கான அடிக்கல் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீகால் அடிக்கல் நடப்பட்டது.

ஆறு மாதத்துக்குள் முடிந்து தருவேன் என மக்களிடம் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் இன்னும் அவை நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக இப் பகுதியில் சுமார் ஆறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயணம் செய்து வருகின்றதுடன் விவசாயம்,சிறு மீன்பிடி தொழில் என பல தேவையான முக்கிய அன்றாட ஜீவனோபாயத்துக்காக இந்த ஆற்றைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளது.

எனினும் அவை நிறைவேறவில்லை மூன்று வருடங்கள் கடந்து நான்காவது வருடம் ஆரம்பித்த போதிலும் மக்கள் போக்குவரத்து செய்வதற்கான ஏற்ற வகையில் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. இதனை பூரணமாக்கி வீதியை அமைத்து மக்கள் பாவனைக்கு கையளியுங்கள் என அம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாலத்தின் சில பகுதிகள் முடிவடைந்த போதிலும் இரு புறத்திலும் உள்ள வீதிகள் செப்பணிடப்படவில்லை, இதனால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியவில்லை.

பூவரசம்தீவிலிருந்து கல்லடி வெட்டுவானுக்கு செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை இதனால் எதிர்நோக்கி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், கர்ப்பிணி தாய்மார்கள், நோயாளிகள் உட்படப் பலரும் இப்பாலும் செப்பனிப்படாததால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பில் இதனை முன்னெடுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திருகோணமலை பிரதான பொறியியலாளர் அலுவலகத்திடம் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக வினவிய போது இவ்வாறு பதில் கிடைக்கப் பெற்றது. கிண்ணியா பிரதேச சபைக்கு உட்பட்ட வடசல் பாலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இரத்மலானை இன் ஊடாக நேரடியான கண்காணிப்பில் பால வேளைகள் நடைபெற்றதால் அங்கு பெறுமாறும்' சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும் உரிய இரத்மலானைக்கான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரகாரம் கோரப்பட்ட போதும் ஒரு மாதம் கடந்தும் பதில் கிடைக்கவில்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரகாரம் உரிய தகவல் தங்களிடம் இல்லாத பட்சத்தில் குறித்த கோரிக்கை கடிதத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபையே உரிய பகுதிக்கு அனுப்ப வேண்டும் ஆனாலும் இவர்களின் நடை முறை சிக்கல் காரணமாக இவ்வாறு இழுத்தடிப்பு செய்யப்பட்டு பால நிர்மாண வேலைகள் வீணடிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பாலத்தை செப்பணிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்

கச்சதீவுத் திருவிழா இன்று தொடங்குகின்றது. பாரம்பரியம் மிக்க இந்தத் திருவிழாவில் இம்முறை இந்தியர்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு திருவிழா இந்திய மீனவர்கள் இந்தக் கடலில் கொண்டிருந்த பாரம்பரிய அதிகாரத்திற்குச் சான்றாக இருந்து வரும் அடையாளம். இலங்கை – இந்தியா என்கிற இருநாடுகள் உருவாகி குடியரசுகளாக அவை தரமுயர்வதற்கு நீண்ட காலம் முன்பிருந்தே இந்தத் தீவு இந்திய மீனவர்களினதும் பயன்பாட்டில் இருந்து வந்திருக்கிறது என்பதற்கான அடையாளம்.

தமிழ்நாட்டின் தெற்குத் துறைகளைச் சேர்ந்த இராமாமேஸ்வரத்தை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் பாரம்பரியமாக இந்தக் கடற்பகுதியில் மீன்பிடித்து வந்தனர். காலப் போக்கில் கச்சதீவை இந்தியா இலங்கைக்கு வழங்கியதன் பின்னரும் அவர்களின் அந்தப் பாரம்பரிய வழிபாட்டு மரபின் தொடர்ச்சியாக கச்சதீவு திருவிழாவிற்காகத்தான், கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவு இன்றி எல்லை தாண்டுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள்.

அப்படிப்பட்ட தமது உரிமையை இந்திய மீனவர்கள் இந்தமுறை புறக்கணித்திருக்கிறார்கள். கச்சதீவுத் திருவிழாவில் தாங்கள் பங்கேற்கப்போவதில்லை என்று அறிவித்திருக்கின்றார்கள். இந்திய மீனவர்கள் சிலருக்கு இலங்கை நீதிமன்றங்களில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இந்தப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

எல்லைதாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபட்ட படகு உரிமையாளர் மற்றும் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர் ஒருவர் மீண்டும் எல்லைத்தாண்டிக் குற்றத்தில் ஈடுபட்டமை ஆகிய குற்றங்களுக்காகவே அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்க வலியுறுத்தி இந்திய மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே மற்றொரு மீனவருக்கும் இலங்கை நீதிமன்றங்களில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. படகில் ஜி.பி.எஸ். கருவி இருந்தபோதும் எல்லை தாண்டி வந்தமைக்காக அவருக்கு இந்தச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய சட்ட ரீதியான பிரச்சினையை அரசியல் ரீதியான போராட்டங்களால் தீர்க்க முற்படுவதால் பயனேதும் கிடைக்கப்போவதில்லை. ஏனெனில் இந்திய இலங்கை இரு நாட்டு அரசுகளும் இணைந்தேதான் இந்த் சட்ட நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றன. எல்லை தாண்டும் மீனவர்களின் விடயத்தில் இலங்கையின் சட்டத்தை இறுக்கி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது இந்திய அதிகாரிகளின் ஆதரவுடனேயே முன்னெடுக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதை இந்தியாவால் தடுக்க முடியாத நிலையில், இலங்கையின் சட்டங்களை இறுக்குவதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு இந்தியாவே ஊக்குவிப்பு வழங்கியது. எனவே கச்சதீவுத் திருவிழாவைப் புறக்கணித்திருப்பது அந்தத் தீவில் இந்திய மீனவர்கள் கொண்டிருக்கக் கூடிய பாரம்பரியமான வழிபாட்டு உரிமையையும் இழந்துவிடும் ஏது நிலையை ஏற்படுத்திவிடக்கூடும்.

இதுபோன்ற விடயங்களில் ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றுவதே சிறந்து.



# ஆயிரம் நாக்கு ஆதிசேஷன்

என். சத்திய மூர்த்தி

அண்மையில் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ்ஜா, தன்னை கொழும்பு அலுவலகத்தில் சந்தித்த தமிழ் தலைவர்களிடம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சி குறித்தே அதிகம் பேசினார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது, தமிழ் தலைவர்கள் எதிர்பார்த்தது போல் அரசியல் தீர்வு குறித்து அவர் அதிகம் கருத்து தெரிவிக்கவில்லை என்றும் செய்திகள் பரவி உள்ளன.

தமிழர் சமூக- அரசியல் உணர்வுகள் எவ்வாறு இருந்தாலும், இது போன்ற ஒரு நிலைபாடு இந்தியாவிடம் இருந்து தற்போதைய களநிலையில் எதிர்பார்க்கப்பட வேண்டியதுதான். காரணம், தமிழ் தலைமைகளே ஆயிரம் நாக்கு கொண்ட ஆதிசேஷன் போல் பேசும் போது, அவர்களில் யாருடைய கருத்துக்கு இந்தியா செவி சாய்த்து, இனப்பிரச்சினை குறித்த தனது கொள்கையை முன்னெடுக்க முடியும்?

இந்தச் சந்திப்பு நிகழ்ந்த சில தினங்களுக்குப் பின்னர் யாழ்பாணம் சென்ற இந்தியத் தூதுவர், அங்கும் தமிழ் தலைவர்களோடும் மூத்த பத்திரிகையாளர்களோடும் கலந்துரையாடினார் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. அப்போது, தமிழ் கட்சிகள் பிளவுண்டு இருப்பது குறித்து அவர் கவலை தெரிவித்தார். அவை ஒன்று சேர வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார் எனவும் செய்திகள் தெரிவித்தன.

இந்தப் பின்னணியில், இனப்பிரச்சினை குறித்து இந்தியாவின் உண்மையான கரிசனையும் கருத்தும் வெளிப்படுகின்றன. அதாவது, அரசியல் தீர்வு என்ற பிரச்சினையை இந்தியா மட்டுமே முன்னெடுக்க முடியாது என்றும், அது தமிழ் கட்சிகள் ஒருமித்த கருத்துடன் ஒரணியில் திரண்டால் மட்டுமே சாத்தியமாகும் என்பதையும் இந்திய தூதுவர் கோடிட்டு காட்டுகிறார் என்றே புரிந்து கொள்ளவேண்டும்.

இதில், வேறொரு பிரச்சினையும் உள்ளது. இனப்பிரச்சினையில் இந்தியாவின் தற்போதைய முன்னெடுப்புகள கூட 1987ஆ-ம் ஆண்டு ராஜீவ் --ஜயவர்தனே ஒப்பந்தத்தின் அடிப்படையில் மட்டுமே சாத்தியப்படும். அவ்வாறு இல்லையென்றால், இந்தியாவும் மேலை நாடுகளைப்போல் இலங்கை அரசிற்கு ‘அறிவுரை’ மட்டுமே கொடுக்க முடியும்.

இரு நாட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே, அரசமைப்பின் பதிமூன்றாவது திருத்தம் முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில், தமிழர் தரப்புக் கோரும் எந்தவொரு புதிய தீர்வுதிட்டமும் பதிமூன்று சார்ந்து இருந்தால் மட்டுமே இந்தியாவிற்கு அதில் பாத்தியதை உண்டு என்பதை தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் அரசும்கூட ஏற்றுக்கொள்ளும்.

அது போன்றே, இந்தியா அரசியல் தீர்வு ஒருபுறம், போர் குற்றங்கள் குறித்த பொறுப்பு கூறல் விடயங்கள் மறுபுறம் என்று இரட்டை குதிரைகளில் சவாரி செய்யமுடியாது. அவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்ததால்தான், மஹிந்த ராஜபக்சே ஜனாதிபதியாக இருந்த போருக்கு முந்தைய காலகட்டத்தில் இருதரப்பு பேச்சு முற்றாக முறிந்தது. இன்றளவும் அந்த நிலையே தொடருகிறது.

### ஆற்றில் ஒரு கால்

புதிமூன்றோடு சம்மந்தப்படுத்தாமல், சும்மாவேனும், கூட்டாட்சி, சமஷ்டி என்றெல்லாம் பேசி வந்தால், அதற்கும் இந்தியாவிற்கும் சம்மந்தம் இல்லை என்று தென்னிலங்கை புது டெல்லியை ‘ஒரம் போ’ என்று சொல்லும். அதற்காக, தமிழர் தரப்பு சமஷ்டி கோரிக்கையை கைவிடவேண்டும் என்பதல்ல பொருள். அதனை அடுத்தடுத்த கட்டங்களில் முன்னெடுக்க மட்டுமே அவர்கள் முயல வேண்டும். அதுவே முதல் கோரிக்கையாக மாறினால், அது எடுபடாது. இது குறித்த முடிவுகளை ‘அவர்கள்’ மட்டுமே எடுக்கவேண்டும். அதற்கு இந்திய தூதுவர் கூறியது போல், ஒற்றுமை மிகமிக அவசியம்.

ஆனால், யார் இந்த ‘அவர்கள்’? அதில்தான் சிக்கல் இருக்கிறது. குண்டுசட்டிக்குள் குதிரை ஒட்டிக்கொண்டிருக்கும் சமகால தமிழ் தலைவர்கள், கிணற்று தவளைகளாவும் தொடர்ந்து இருந்து வருவது துரதிர்ஷ்டமே. உண்மையிலேயே அவர்கள் ஒன்றாய் நின்றிருந்தால் அவர்களுக்கு அரசியல் நீக்குப்போக்குத் தெரிந்திருந்தால், அவர்கள் ஒரு முன்னெடுப்பை எடுத்திருக்க வேண்டும்.

எப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே தனது சிம்மாசன உரையில் இனப்பிரச்சினை குறித்து ஒரு வார்த்தைகூடக் கூறவில்லையோ, அப்போதே அந்த உரை மீதான விவாதத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கு பெற மாட்டார்கள் என்று ஒன்று சேர்ந்து அறிவித்திருக்கலாம். அதற்கு அடுத்த கட்டமாகவோ, மாற்றாகவோ, ஒரு நாள் விவாதத்தில் பிற கட்சிகளையும் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரும் பங்கு பெறகூடாது என்று கோரிக்கை விட்டிருக்கலாம்.

அப்போது ஜனாதிபதி தேர்தலில், தமிழர் ஆதரவை கோர இருக்கும் கட்சிகள் மற்றும் தலைவர்களின் சாயம் வெளுத்திருக்கும். சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் கட்சி, அனுர குமார திசநாயகா தலைமைத்துவம் நல்கும் ஜே.வி.பி. ஆகிய இருவரின் நிலைமை வெளிப்பட்டிருக்கும். அதிலும் குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லீம், மலையக தமிழர் வாக்குகளை குறிவைக்கும் சஜித் ஒரு முடிவு எடுக்கத் தள்ளப்பட்டிருப்பார்.

அதற்கு அப்பால், குறிப்பாக, சஜித் அணியில் பங்குபெறும் முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் கட்சியினர் அரசியல் தீர்வு குறித்த தங்களது நிலைபாட்டைத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகி இருப்பார்கள். அது போன்றே. வடக்கிலும் கிழக்கிலும் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்று அரசியல் செய்யும் தமிழ் கட்சிகளே சிக்கலுக்குள்ளாகி இருப்பார்கள்.

### உட்கட்சி சண்டை

ஆனால், நடந்தது என்ன? .இன்றளவும் தமிழர்களின் முக்கிய அரசியல் அணியாக கருதப்படும் தமிழ் அரசு கட்சி, உள்கட்சி சண்டைகளால் உடைந்து நிற்கிறது. நாடாளுமன்றத்தில் பிரச்சினையை எழுப்ப வேண்டிய சமயத்தில் அவர்கள் உள்கட்சி பூசல்களிலும் அதன் காரணமாக நீதிமன்ற வழக்குகளிலும் சிக்கி அல்லோல கல்லோலப்பட்டு வருகினறனர். இப்போது கட்சியின் தலைவர் யார் என்ற அடிப்படைக் கேள்விகூட எழுந்துள்ளது.

பச்சையாகச் சொல்லப்போனால், பொதுக்குழு கூட்டி சிறீதரனை தலைவராக தேர்ந்தெடுத்ததே செல்லாது என்ற கோணத்தில் தற்போதைய வழக்குகள் வழி மாறலாம். இடைப்பட்ட காலத்தில், ஒரே விடயம் குறித்து யாழ்பாணம் மற்றும் திரிகோணமலை மாவட்ட நீதிமன்றங்கள் தனித்தனியாக விசாரணை மேற்கொள்ள முடியுமா, என்ற கேள்விகூட எழலாம்.

இதேநிலை தொடர்ந்தால், உள்கட்சி தேர்தலுக்கு முன்னர் தலைவராக இருந்த மாவை சேனாதிராசாவே பதவியில் சில காலம் கூட தொடரும் வாய்ப்பு இருக்கிறது என்று கருதுவோரும் உள்ளனர். ஆனால், அதுவும் சாத்தியமா, என்ற கேள்வியும் எழுகிறது.

சிறீதரனின் தேர்தலுக்கு முந்தைய பத்திரிகை

(7ஆம் பக்கம் பார்க்க...)



# மகத்துவம் மிக்க மாசி மகத்திருநாள்

மாதங்களில் மாசி மாதம் தனிச்சிறப்புடையது. இந்த மாத வழிபாடுகளில் நீராடுவது தனிச்சிறப்புடையது. அதனால் மாக ஸ்நானம் சிறப்பான ஒன்றாக சாஸ்திரங்கள் விதிக்கின்றன. எப்போதும் வைதிக மரபையே பேசும் பழந்தமிழ் நூல்களும் இந்த மாதம் கடலாடும் மாதமாக குறிப்பிடுகின்றன.

எமது பழைமையான திருத்தலங்கள் எல்லாம் புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டு விளங்குவன. எனவே இப்புண்ணிய மாதத்தில் அப்புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வழிபடுவது சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.


அதிலும் மாசி மாத பௌர்ணமி சேர்ந்த மக நக்ஷத்திரம் மிகவும் சிறப்புடையது. இந்த நாளில் தான் அன்னை பராசக்தியே தக்ஷாயணியாக அவதரித்ததாக புராணங்கள் சொல்கின்றன.

தேவியே அவதரித்த இந்த புண்ணிய நாளின் பெருமையை வேறு எப்படிச் சொல்ல முடியும்? இதனால் இந்நாளில் அனைத்து அம்பிகை ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நிகழும். மிகச்சிறப்பாக காஞ்சி காமாக்ஷி அம்பாள் ஆலய பெருவிழா மாசி மகத்தை ஒட்டியே நிகழ்கிறது. எம் நாட்டில் மாத்தளை முத்துமாரியம்பாள் ஆலய மாசி மக பஞ்சரத பவனி புகழ்பெற்றது.

இதனால் இந்நாள் தேவிக்கு சிறப்பானது என பலரும் நினைத்தாலும் சிவபெருமானுக்கும் மாசி மகம் சிறப்புடையது. வருண பகவானுக்கு சிவபெருமான் அருளிய திருநாள் இது.

குறிப்பாக கும்பகோணத்தில் நடக்கிற மாசி மகப்பெருவிழா அதி சிறப்புடையது. அங்கே அமைந்துள்ள மகாமக திருக்குளத்தில் மாசி மக நாளில் அவ்வூரிலுள்ள சிவாலய, விஷ்ணுவாலய மூர்த்திகள் எழுந்தருளி தீர்த்த உத்ஸவம் கண்டருள்வர்.

ஆறுபடை வீடுகளில் சிறப்பு மிக்க திருச்செந்தூரில் வருடத்தில் இரண்டு மஹோத்ஸவங்கள் கொடியேற்றத்தோடு நிகழ்கிறது. அவை ஆவணி மற்றும் மாசி உத்ஸவங்கள்



ஆகும். அதில் ஒன்றான மாசி மாத மஹா உத்ஸவம் இக்காலத்திலேயே நிகழ்கிறது.

யாழ்ப்பாணத்திலும் சுதுமலையில் மானிப்பாய் வீதியோரம் பன்னூறு ஆண்டுகள் பழைமையான முருக மூர்த்தி ஆலயம் உள்ளது. சுவாமி அலங்காரம், நேர முகாமைத்துவம் போன்றவற்றுக்குப் புகழ் பெற்ற இக்கோயிற் பெருவிழாவும் மாசிப்பௌர்ணமியை நிறைவாகக் கொண்டே நிகழ்கிறது. இவ்வாறு இந்நாள் பல்வேறு கோயில்களில் விழா நாளாகிறது.

தவிர, இந்நாளில் தான் சுவாமிநாதனான முருகன் தந்தைக்கு உபதேசித்த நாள் என்பர். எனவே, பொதுவாக மாசி மாதத்தில் மந்த்ரோபதேசம் பெறுவது சிறப்பு என்ற வழக்கம் உண்டு. அதனால் இந்த மாதத்தில் அதிகளவில் உபநயனம் (பூணூல் சடங்கு) நிகழ்வதை காணலாம். இந்த மாசி மக நாள் மகாவிஷ்ணுவுக்கும் சிறப்புடையது. இந்நாளில் விஷ்ணுவை துளசியால ஆராதிப்பது சிறப்பு. பொன்னாலையில் வரதராஜப்பெருமாளுக்கு மாசி மகத்தை ஒட்டி இலட்ச நாம அர்ச்சனை நிகழ்கிறது.

**மயூரகிரி சிவாச்சார்யார்**

## பாடல் எண் : 1
## பண் : கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

பொழிப்புரை:

கெடில ஆற்றின் வடகரையில் விளங்கும் திருவதிகை என்னும் வீரட்டானத் திருப்பதியில் உகந்தெழுந்தருளியிருக்கும் தலைவனே! யான் இப்பிறப்பில் என் அறிவு அறியப் பல கொடுஞ் செயல்களைச் செய்தேனாக எனக்குத் தோன்றவில்லை. அவ்வாறாகச் சூலைநோய், யாருக்கும் நோய்முதல் புலப்படாத வகையில் என் வயிற்றினுள் குடலோடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டிச் செயற்படாமல் மடக்குதலால் அடியேன் அவ்வலியைப் பொறுக்க இயலாதேனாக உள்ளேன். கூற்றுவனைப் போல அந்நோய் அடியேனைத் துன்புறுத்தும் செயலை நீக்கும் ஆற்றலுடையீர். அந்நோயை விலக்கினால் எப்பொழுதும் காளை மீது ஊரும் உம் அடிக்கண் நீங்காமல் மனத்தால் துணிவும் தலையால் தணிவும் மொழியால் பணிவும் தோன்ற வணங்குவேன். ஏற்றாய் அடிக்கு ஏ. ஏ - தேற்றம்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City


கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhopees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஆயிரம் நாக்கு.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

செய்திகளை வைத்து நோக்கும்போது, மாவையார், கட்சியின் யாப்பிற்கு உட்பட்டு நடத்தியிருக்க வேண்டிய பொதுகுழு கூட்டங்களை பல வருடங்கள் நடத்தாமலே இருந்தார் என்ற பெரும் குற்றசாட்டுகள் எழுந்த வண்ணம் இருந்தன. அந்தப் பிரச்சினையும்கூட தற்போதைய வழக்குகளில் வாத பொருளாகலாம்.

அடுத்த காரணம்.. சிறீதரன், சுமந்திரன் ஆகிய இருவரும் தலைமைத்துவத்திற்குப் போட்டியிட்ட உள்கட்சித் தேர்தலில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பொதுக்குழு உறுப்பினர்களைவிட அதிகமானோர் வாக்களித்தனர் என்ற குற்றச்சாட்டு. இதுவே, தற்போதைய வழக்குகளின் அடிப்படை எனலாம்.

### மாவையின் எதிர்காலம்

எது எப்படியோ, இந்த வழக்குகள் விசாரணைக்கு வரும் போது, மாவை சேனாதிராஜா கட்சித் தலைவராக தொடருவது கூடச் சட்டப்படி செல்லாது என்றும் வாதிடப்படலாம். அத்தகைய வாதத்தை நீதிமன்று ஏற்றுக்கொண்டால், தமிழ் அரசு தலைவரே இல்லாத கட்சியாகலாம்.

அவ்வாறு தலைவரே இல்லாத கட்சியில், அவரது பதவிக் காலமே சர்ச்சைக்குள்ளான நிலையில், அவரால் நியமிக்கப்பட்ட பொது செயலாளர், பிரதி பொதுச்செயலாளர் ஆகியோரும் பதவி இழக்க நேரிடும். இதனால் பல்வேறு விதமான அரசமைப்பு நடைமுறைச் சிக்கல்கள் தோன்றலாம்.

உதாரணத்திற்கு, எதிர்வரும் ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசு கட்சி வேட்பாளர்களை களம் இறக்க வேண்டுமானால், அது குறித்த அரசியல் முடிவுகளை எடுப்பது யார், என்ற கேள்வி எழும். அதில் ஏதோ 'அஜஸ்ட்மென்ட்' செய்து கொண்டாலும், கட்சியின் 'வீடு' தேர்தல் சின்னம் முடக்கப்பட்டுவிடும் அபாயம் உள்ளது. அல்லது, அவ்வாறான முடிவை தேர்தல் ஆணையம் எடுக்கும் வாய்ப்பு உள்ளதா, என்ற கேள்விக்கான விடை சட்டதரணிகளிடமே உள்ளது.

இதில் பிரச்சினை என்னவென்றால், இடைப்பட்ட காலத்திலாவது, சட்ட ரீதியாகவேனும், மாவையின் எதிர்காலமே தமிழ் அரசு கட்சியின் எதிர்காலம் என்ற நிலைமை தோன்றலாம். அதாவது, சீறிதரனின் தேர்தல் குறித்த வழக்குகள் முடிவுறும் காலம் வரை சேனாதிராஜாவே தலைவராக தொடருவார் என்ற நிலைமை தோன்றினால் மட்டுமே, தமிழ் அரசு கட்சியின் செயல்பாடுகள் தொடர முடியும்.

### 'வீடு' பு ͅ ட்பபடுமா?


மாவையின் பதவிக்கும் ஆப்பு அடித்தால் அந்தக் கட்சியே செயல்படாமல் போகலாம். தற்போது செயலாற்றாமல்தான் அந்தக் கட்சி உள்ளது என்பது வேறு விடயம். என்றாலும், கீழமை நீதிமன்று தொடங்கி நாட்டின் உச்ச நீதிமன்றம் வரையிலும் இந்த உள்கட்சி விவகாரம் விஸ்வரூபம் எடுக்கும் என்றால், அது மிகவும் கவலைக்குரிய விடயம்.

வடக்கு மாகாண முதலமைச்சராக விக்னேஸ்வரன் தன்னை பதவியில் இருந்து நீக்கியது செல்லர்து என்று கூறி அன்றைய அமைச்சர் டெனிஸ்வரன் தொடுத்த வழக்கை இதற்கு உதாரணமாக கூறலாம். அந்த வழக்கின் முடிவு தெரிந்தபோது, மாகாண சபையின் பதவிகாலம் முடிந்திருந்தது.

தற்போதைய சூழலில், தமிழ் அரசுக் கட்சி தலைமை குறித்த வழக்கு தொடரும்போதே, உட்கட்சிப் பூசல்கள் விரிவடைந்து, கட்சியே இரண்டாகவோ அல்லது மூன்று -நான்காகவோ உடையும் நிலைமை தோன்றினால், பின்னர் கேட்கவே வேண்டாம். இதுவே தனி ஒரு குடும்பத்தில் பாகப் பிரிவினை குறித்த சண்டை என்றால், வீட்டினுள்ளேயே சுவர் ஒன்றை எழுப்பி, அனைத்து தரப்பினரும் தனித்தனியாக, ஆனால் ஒரு சேர வாழலாம். அரசியல் கட்சி என்பது ஒரு வீடு அல்லவே.

### தகுதியானவர்

இந்தப் பின்னணியில், கட்சியின் எதிர்காலம் குறித்த கவலையுள்ள மூத்த தலைவர்களில் ஒரு சிலராவது ஒருங்கிணைந்து, கட்சியின் மானம் இன்னமும் பொது வெளியில், அதுவும் குறிப்பாக தலைநகர் கொழும்புவில் நாறாமல் இருக்கும் வகையில் பேச்சு மூலம் நல்ல முடிவை எட்ட முயலவேண்டும்.



உண்மை என்னவோ, இந்த முயற்சிக்கு தலைமை தாங்க மிகவும் தகுதியானவர் சம்மந்தன் மட்டுமே. ஆனால் அவரது வயது -மூப்பு மற்றும் உடல்நலம் குறித்த காரணங்களால் அவரால் இதில் எந்தவித முன்னெடுப்புகளையம் செய்ய முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், தற்போது பத்திரிகைகளில் பெயர் அடிபடாத தலைவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள், சம்மந்தனின் ஆசியோடும் அறிவுரையோடும் இந்த முயற்சிகளை செய்ய வேண்டும்.

இது சாபம் அல்ல. ஆனால், தற்போதைய தலைவர்கள், கட்சியையும் அசிங்கப்படுத்தி, சமூகத்தையும் தொடர்ந்து அவதியுற வைத்தால், தந்தை செல்வா உள்ளிட்ட தலைவர்களின் ஆவி அவர்களை சும்மா விடாது. ஆனால், தமிழ் அரசுக் கட்சிக்கு வெளியே தமிழ் தலைவர்கள் பலரும் தற்போது சேர்ந்தோ, பிரிந்தோ இருக்கிறார்கள் என்பதும் நினைவில் கொள்ளப்பட வேண்டிய விடயம். இதன் தொடர்ச்சியாகவே, தமிழ் அரசு கட்சியே துண்டு துண்டாக சிதறும் நிலைமை தோன்றினால், இந்திய தூதுவர் சந்தக்ஷ் ஜா கூறிய தமிழர் ஒற்றுமை எங்கே? அவ்வாறே தொடருமானால், தமிழ் சமூகமும்தான் எங்கே?

அதன் பின்னர், இந்தியாவிடம் என்னதான் கோரிக்கை, யார்தான் வைக்கப் போகிறார்கள்? அல்லது வைக்கதான் முடியும்?



# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூகத்தால் ஸ்தாபக உபவேந்தருக்கு செங்கம்பள வரவேற்பு

(கே எ ஹமீட்)



தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 27 வருட காலத்தில் பல குணாதிசயங்களைக் கொண்ட உபவேந்தர்களைத் தன்னகத்தே உள்வாங்கி அதன் கல்வி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி பாதையில் வீறு நடை போட்டு முன்னேறிச் செல்கின்றது.

அந்தவகையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிச் சென்ற உபவேந்தர்களில் பல்கலைக்கழகத்தின் ஆயுள் உள்ள மட்டும் என்றுமே நினைவு கூறத்தக்க பெயர் நாமம் என்றால் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிற்பி முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் எம்.எல். ஏ. காதர் அவர்களாவார்.

பேராசிரியர் எம்.எல். ஏ. காதர் சுகவீனமுற்ற நிலையிலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை தனது உயிருடன் சுமப்பவர். அன்னவரை செங்கமளமிட்டு வரவேற்று அவரைக் கண்டு அளவளாவும் அரிய நிகழ்வு வியாழக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்றது.

பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் அவர்களது நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பீடாதிபதிகள், நூலகர், பதில் நிதியாளர் மற்றும் பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகம் திரண்டிருந்தது.

நிகழ்வின்போது உபவேந்தர் றமீஸ் அபூபக்கர், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், பல்கலைகழக ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா மற்றும் செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீம் மற்றும் கலை கலாசார பீட அரசியல்துறையின், துறைத்தலைவர் கலாநிதி எம்.அப்துல் ஜப்பார் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். அத்துடன் சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், பேராசிரியர் எம்.எம். பாஸில், நூலகர் எம்.எம். றிபாஉடீன், கலாநிதி எம்.அப்துல் ஜப்பார், பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா மற்றும் கல்விசார ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம். எம்.எம். காமில் உள்ளிட்டோர் முன்னாள் உப வேந்தர் பேராசிரியர். எம்.எல். ஏ. காதர் தொடர்பான தங்களது உள்ளக்கிடக்கைகளை வெளியிட்டனர்.

மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அவர்கள், கிழக்கில் யுத்த மேகம் சூழ்ந்த நிலையில் கிழக்கு மண் மாணவர்கள் கண்ட அவலங்களைக் களைவதற்காகத் தனது எண்ணக் கருவில் தோன்றிய தென்கிழக்கிற்கான பல்கலைக்கழக உருவாக்கம் எனப்படுவது செயற்பாட்டு வடிவமாக ஆரம்பிக்கப்பட்டு அது பின்னாடி தென்கிழக்கு பல்கலைக்கழகமாக உருவாக்கம் பெற்ற போது அதன் முன்னோடியாக அதன் கல்வி அதன் ஆளணி அதன் உருவாக்கம் போன்றவற்றில் தன்னை முதன்மைப்படுத்தி தன்னை ஒரு கடை நிலை ஊழியனாக அர்ப்பணித்து இன்று பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் கிழக்கின் ஒரு கேந்திர நிலையமாக ஒரு சர்வதேச தரம் பல்கலைக்கழகமாக உருவாவதற்கு அதன் முதுகெலும்பாக செய்யப்பட்டவர்தான் என்றும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பேராசிரியர் எம்.எல்.ஏ காதர் அவர்கள்.

மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அவர்களின் கனவுக்கு உருவம் கொடுத்து சகல வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்குவதில் முன் நின்றதுடன் தனது சேவைகாலத்தில் கலை கலாசார பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம் போன்றவற்றின் உருவாக்கங்களில் தன்னை முழு நேர ஊழியனாக அர்ப்பணித்து சேவையாற்றிய ஒரு செம்மல் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்கள். ஊழியர்கள் இடத்தில் வேலை வாங்குவதில் முகாமையாளராக இருப்பவர்கள் ஒவ்வொரு விதம் ஆனால் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்கள் ஒரு வித்தியாச ரகம் என்று பலர் சொல்லி நாங்கள் அறிந்ததுண்டு. முற்போக்கு சிந்தனை, நேர்மை, கடமை தவறாமை போன்ற உயரிய குணாங்களை தன்னகத்தே கொண்டதுடன் பெறாமை, வஞ்சகம், சூழ்ச்சி எதிர்வினை சார் குணங்கள் அறவே அற்றவர்.

பல்கலைக்கழகத்தின் கடைநிலை ஊழியர் தொடங்கி உயர்நிலை உத்தியோகத்தர் வரையும் தட்டிக் கொடுத்து அரவணைத்து அவர்களின் சேவைகளைப் பாராட்டி தோள் மீது தோள் கொடுக்கும் தோழனாகவும், வழிகாட்டும் வழிகாட்டியாகவும், ஆலோசனை செய்யும் ஆலோசராகவும், சுக துக்கங்களில் பங்கெடுக்கும் சகோதரனாகவும், தலைமை தாங்கும் தலைவனாகவும் செயற்பட்டு இந்தப் பல்கலைக்கழக உருவாக்கத்தின் ஒவ்வொரு படித்த ரங்களிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இதன் காரணங்களாலேயே அனைத்து தரப்பு ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் என அனைவராலும் என்றுமே நினைவு கூரத்தக்க ஒருவராக பேராசிரியர் எம்.எல்.ஏ காதர் திகழ்ந்தார்கள் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை.

கிழக்கு மண்ணின் கல்வியின் தாகம் நிறைவேற வேண்டும் என்று ஒவ்வொரு கனப்பொழுதிலும் தனது ஒவ்வொரு சிந்தனைகளிலும் தனது மனம், எண்ண ஓட்டங்களிலும் இருந்ததுடன் தான் சேவையாற்றிய தென்கிழக்குப் பல்கலைக்கழகம் திறம்பட ஸ்தாபிக்கப்பட்டு அதன் வெளியீடுகளில் எமது சமூகம், எமது பிராந்தியம், எமது நாடு போன்றவற்றிற்கு அங்கு பயின்றவர்கள் முதன்மையான நபர்களாக உள்வாங்கப்பட்டு சேவை ஆற்ற வேண்டும் அதேபோல பல்கலைக்கழகத்திலிருந்து வெளியாகும் மாணவச் செல்வங்கள் நாட்டின் சிறந்த கல்வியியலாளர்களாக சேவையாற்ற வேண்டும் என்ற அவரது உயரிய சிந்தனையை அவர் தற்பொழுது நிறைவேறி வருகின்றமை சிறப்பாகும்.

இன்று அவர் ஒரு நோயாளியாக தனது வீட்டில் முடங்கி இருந்த போதிலும் அவரது முற்போக்கு சிந்தனைகள், எண்ணங்களோ என்றுமே சமூகத்தின்பாலும் தனது பல்கலைக்கழகத்தின் எதிர்கால செயற்பாடுகளின்பாலும் தங்கியுள்ளது எமக்கான பெரும் வரப்பிரசாதமாகும். பல்கலைக்கழக சூழலில் இன்று நாம் எவ்வளவு உயரிய அடைவுகளை கண்டிருந்தாலும் அதன் அர்ப்பணிப்பு மிக்க உருவாக்கங்களுக்கு முதுகெலும்பாக தன்னை அர்ப்பணித்து செயலாற்றிய ஒரு செம்மல் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் என்றும் எமது சமூகத்தாலும் எமது கல்வியியலாளர்களாலும் நினைவு கூரத்தக்கவர் என்பதை எவராலும் நிராகரிக்க முடியாது அவ்வாறு நிராகரிப்பதற்கு எந்த ஒரு நியாயமும் இருக்க வாய்ப்பில்லை.

எல்லாம் வல்ல இறைவன் எமக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த தேக ஆரோக்கியத்தையும் வழங்கி அவர் மேன்மேலும் சிறப்புற்று வாழ அருள் புரிய வேண்டும் என்று பிராத்திப்போமாக. (05)

## 6 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாவட்டங்களில் மனித உடலால் தாங்கிக்கொள்ளக்கூடிய வெப்பத்தைவிட அதிக உஷ்ணம் எதிர்பார்க்கப்படுகிறது. அதிக வெப்பத்திலிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களையும்பின்பற்றுவது அவசியமாகும்.

அந்தவகையில், அதிகளவு தண்ணீர் அருந்துதல், அதிக சோர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல், வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணிதல் மற்றும், நிழலான இடங்களில் தங்கியிருத்தல் போன்றவை அடிப்படையானவிடயங்களாகின்றன என்றுள்ளது.

## தமிழ்நாட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமறைவாகியிருந்துவிட்டு அவர் நாடு திரும்பினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணம் திரும்புவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே விமான நிலைய வளாகத்தில் காத்திருந்த பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம்மற்றும்கோப்பாய் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் இந்தச் சந்தேகநபர், நீண்ட காலமாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

சந்தேக நபரை பொலிஸ் காவலில்தடுத்துவைத்துபொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அந்நியச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு நேரங்களில் பல்வேறு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கான பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் இரவில் உணவகங்களைத் திறந்து வைப்பது உள்ளிட்ட இரவு நேரப் பொருளாதாரத்தை நாடுவதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணியை சுமார் 70% அதிகரிக்க முடியும். உலகின் பல நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு இரவுநேரப்பொருளாதாரத்தின் பங்களிப்பை பயன்படுத்திக் கொள்கின்றன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, நம் நாட்டு மக்களும் இரவு நேரங்களில் உணவகங்களுக்குச்செல்வது உள்ளிட்ட பல்வேறு கேளிக்கைகளில் ஈடுபடுவதையே விரும்புவது வழக்கம். இதன்மூலம் விசேடமாக மதுவரி வருமானத்தையும் அதிகரிக்க அரசுகளிற்கு வாய்ப்பளிக்கிறது. ஒரு நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கும், நாட்டின் நிலையான வளர்ச்சியைப் பேணுவதற்கும், அரச வருமானத்தை அதிகரிப்பது அவசியம்.

இரவு நேரப் பொருளாதாரம் தொடர்பில் சிலதரப்பினர்பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். ஆனால்இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகள் இருக்கவேண்டும். குறிப்பாக கடலோரப் பகுதிகளிலும், கொழும்பு போன்ற நகர்ப்புறப் பகுதிகளிலும் முக்கிய சுற்றுலாத் தலங்கள் உள்ளன. எனவே, இதுபோன்ற இடங்கள் தொடர்பான சட்ட, விதிமுறைகளைத் திருத்தம் செய்து, தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டும்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளில்இருந்துஇந்தநாட்டிற்குச்சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்கள் இந்த நாட்டிற்கு வந்து பொழுது போக்கக்கூடிய வகையில் தற்போதுள்ள சில கட்டுப்பாடுகள் திருத்தப்படவேண்டும். உதாரணமாக, உணவகங்கள் திறக்கும் நேரத்தை மாற்ற வேண்டும். சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியான ஒரு நெகிழ்வான கொள்கைக்கு நாம் செல்ல வேண்டும் என்றார்.

## சக்கர நாற்காலி வழங்கிவைப்பு

(மூதூர் நிருபர்)



மூதூர் பிரதேச செயலகத்தால் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சக்கர நாற்காலி விசேட தேவையுடையோருக்கு நேற்று (வியாழக்கிழமை) மூதூர் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் ஆர். பிரசாந்தனால் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது. (05)




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு மைதானம் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு!

## விரைவில் அமைச்சரவை பத்திரம் என்கிறார் திலீபன் எம்.பி





வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரிக்கு மைதானம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாகவும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள காணி ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சென்று அவருடன் கலந்துரையாடியமை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா மாவட்டத்தில் உள்ள முதன்மையான பாடசாலைகளில் ஒன்றாகிய விபுலானந்தா கல்லூரியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் 70 வருடமாக மைதானம் இல்லாது குறித்த பாடசாலை பல்வேறு கஸ்டங்களை எதிர்நோக்கி வந்தது. மைதானத்தைப் பெறுவதற்கு பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் இது வரை மைதானம் கிடைக்கவில்லை. இந்நிலையில் குறித்த பாடசாலைக்கு என மைதானம் அமைக்க காணியினை பெறுவது தொடர்பில் காணி ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடினேன்.

விரைவில் அமைச்சரவை பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து அதனூடாக மைதானத்திற்கான காணியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் எனத் தெரிவித்தார்.

(05-100)

# யாழ். போதனா வைத்தியசாலையில் அலுவலருடன் முரண்பட்டவர் கைது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அலுவலர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட நபரொருவர் பொலிஸாரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

காரைநகரிலிருந்து அம்புலன்ஸில் கொண்டுவரும்போது உயிரிழந்த நபரொருவரின் சடலத்தை விரைவாகத் தருமாறு வைத்தியசாலையின் மேற்பார்வையாளர் அலுவலகத்திற்குச் சென்று தகாத வார்த்தைகளைப் பேசிய குறித்த நபர், அலுவலகர்களுடன் முரண்பட்டு அங்கிருந்த பெயர் பலகையையும் சேதப்படுத்திய நிலையில் வைத்தியசாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதன்போது குறித்த நபர் மதுபோதையிலிருந்தார் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் சந்தேக நபரிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தேசிய பயிற்சி மையத்துக்கு சென்ற மாணவர்களுக்கு இடையில் மோதல்

## 17 மாணவர்கள் காயம்

பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 17 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த மாணவர்கள் மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பயிற்சி ஒன்றிற்காக ரந்தெம்பே பிரதேசத்தில் உள்ள தேசிய பயிற்சி மையத்திற்கு கொழும்பு , கம்பஹா உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் இருந்து பாடசாலை மாணவர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (05)

# சாய்ந்தமருது எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலய வித்தியாரம்ப விழா





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா நேற்று (வியாழக்கிழமை) கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரியக் கலையான சாய்ந்தமருது முஹம்மதியா கலைமன்ற கோலாட்டக் கலைஞர்களின் கோராட்டம் மற்றும் சிலம்பாட்டம் போன்ற கலைகளால் அதிதிகளுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மயோன் குரூப்பின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை சாஹிரா தேசியப் பாடசாலையின் முன்னாள் அதிபர் எம். .எம் இஸ்மாயில் மற்றும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என். எம்.ஏ. மலிக், ஆரம்ப கல்வி வளவாளர் எஸ்.எம். எம். அன்ஸார், ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றப்பட்டதோடு, தரம் இரண்டு மாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

(05)

# பெண் விரிவுரையாளர் விபத்தில் பரிதாப சாவு



தலவத்துகொட விக்கிரமசிங்கபுர சந்தியில் வீதியைக் கடந்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப் பீட உதவி விரிவுரையாளர் லக்மினி போகமுவ, வாகன விபத்தில் சிக்கி பலத்த காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார். விபத்து நடந்த இடத்துக்கு அருகிலிருந்த சிசிடிவி கமெராவில் சம்பவம் பதிவாகியுள்ளது.

உதவி விரிவுரையாளர் வெள்ளைக் கோட்டில் வீதியைக் கடக்காமல், வீதியின் மறுபுறம் வரும் வாகனங்களைக் கவனிக்காமல் வீதியை கடக்க முயற்சித்த போது விபத்து நிகழ்ந்துள்ளது.

வாகனத்தை செலுத்தியவர் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர் என பின்னர் தெரிய வந்தது. (05)

# செல்வநகர் தி/மூ.அந்நூர் வித்தியாலய புதிய மாணவர்களை இணையும் விழா







(மூதூர் நிருபர்)

மூதூர் கல்வி வலயத்திற்குப்பட்ட தி/ மூ/ செல்வ நகர், அந்நூர் வித்தியாலயத்தில் பாடசாலைக்கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் எனும் தொனிப்பொருளில் தரம் 1இல் புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளுவதற்கான வரவேற்கும் வைபவம்

பாடசாலை அதிபர் கே.எம். எம்.றிஸ்மி தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) பாடசாலையில் நடைபெற்றது.

இதில் கௌரவ அதிதியாக மூதூர் வலயக்கல்வி அலுவலகம் சார்பில் ஈபிஎஸ்ஜ இணைப்பாளர் எஸ்.எம்.நௌபர் கலந்துகொண்டார். மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் உலமாக்கள் பெறறோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் சமூகத்தை ஓரக்கண்ணால் பார்க்கும்நிலை இன்னும் நீங்கவில்லை

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் சபையில் விசனம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், முஸ்லிம் சமூகத்தை ஓரக்கண்ணால் பார்க்கும் நிலை இன்னும் நீங்கியபாடில்லை என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

'இந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது மிக மோசமான நிலையில் காணப்பட்டாலும் என்றாவது ஒருநாள் மீள் எழுச்சிபெறும் என்ற நம்பிக்கையோடு மக்கள் இருக்கின்றார்கள். ஆனாலும், அரசாங்கம் இந்த விடயத்தில் தொடர்ந்தும் அசமந்தப்போக்கில் செயற்படுவதை சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

குறிப்பாக, விவசாயம் என்பது இந்த நாட்டின் முதுகெலும்பாகும். விவசாயிகள் மீதான அடக்குமுறையே கடந்த கோட்டா அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய ஒரு காரணமாகும். எனவே, கோட்டா அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுள்ள புதிய ஜனாதிபதிக்கு விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை இந்த உயர்சபையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, பொத்துவில், அக்கரைப்பற்று, இறக்காமம், வரிப்பத்தாஞ்சேனை, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களில் அதிகமான விவசாயிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடனிலிருந்து மீள முடியாமல் கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாகக் கூறியிருந்தாலும், அவர்கள் அந்தத் திட்டத்தில் சரியான முறையில் உள்வாங்கப்படவில்லை. அவர்களுக்கான கொடுப்பனவுகளை உரிய முறையில் வழங்குவதற்கு எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் புத்தளம் உள்ளிட்ட மாவட்டங்களில் கூட விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கான காப்புறுதித் திட்டம் முறையாக செயல்படுத்தப்படவில்லை என அறியமுடிகின்றது. அண்மையில் இடம்பெற்ற மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில், விவசாயிகள் மிகவும் வேதனையுடன் தாம் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களைக்கூறியிருந்தார்கள். சில பகுதிகளில் குறிப்பிட்ட காப்புறுதித் திட்டம் நடைமுறையில் இருந்தாலும், அவை ஒருதலைப்பட்சமாகவும் அதிகாரிகளுக்கு விரும்பிய வகையில் வழங்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, விவசாய அமைச்சர் இந்த விடயத்தில் கவனஞ்செலுத்தி, கடனிலிருந்து விவசாயிகளைக் காப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, வட மாகாண மீனவர்கள், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் கடற்படையினரின் இடையூறுகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றாடம் பல சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளனர். எனவே, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், இந்த விடயங்களில் கவனஞ்செலுத்தி, மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், அம்பாறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், நெல் கொள்வனவுக்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்று எம்மிடம் முறையிடுகின்றனர். வியாபாரிகள் தங்களுக்கேற்றவகையில் விலையை நிர்ணயித்து, மிகவும் குறைந்த விலையில் நெல் கொள்வனவு மேற்கொள்கின்றனர். இதனால் கடனிலிருக்கும் விவசாயிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோன்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தை ஓரக்கண்ணால் பார்க்கும் நிலை இன்னும் நீங்கியபாடில்லை. அல்குர்ஆனை அல்லது ஓர் அரபுப் புத்தகத்தை வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. கோட்டாபய ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அரபுப் புத்தகங்களை இந்த நாட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம் என்று, அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார்.

உலக மக்கள் அனைவராலும் அறியப்படுகின்ற, போற்றப்படுகின்ற இஸ்லாமியர்களின் வேதநூலான அல்குர்ஆனைக் கூட இந்த நாட்டிற்குள் கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. அரபுக் கல்லூரிக்குத் தேவையான புத்தகங்களைக் கூடக் கொண்டுவர முடியாதுள்ளது. ஒன்லைனில் அனைத்துவிதமான புத்தகங்களையும் படிக்கக்கூடிய சூழலில் நாம் இருக்கின்ற போதும், இலங்கையில் மாத்திரமே இவ்வாறு புத்தகங்களைக் கொண்டுவருவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. அரபு நாடுகளில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகள், அவர்களுக்கு தேவையான ஒரு புத்தகத்தை கொண்டுவரும் பட்சத்தில் அதை பறித்தெடுக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு ஜனாதிபதி ஒரு நிமிடத்தில் தீர்வுகாண முடியும்.

எனவே, தற்போது பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்ற ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளருக்குக் குறித்த கடிதத்தை மீளப்பெற அறிவுறுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, ராகமை வைத்தியசாலையில் அமைந்துள்ள பள்ளிவாசல் தற்பொழுது மூடப்பட்டுள்ளது. வைத்தியர்கள் மாத்திரமன்றி நோயாளர்களும் தொழுவதற்கு அங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்த மறுதினமே அந்தப் பள்ளிவாசலை மூடிவிட்டனர். ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கும் அந்தப் பள்ளிவாசலுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்க விரும்புகின்றேன்.

நுவரெலியா, நோர்வூட் தோட்டத்தில் உள்ள பள்ளிவாசலுக்கு போதிய வருமானம் இல்லை என்ற காரணத்தால், பள்ளிவாசலுக்கு அண்மித்த காணியில், இஸ்லாமிய நிறுவனம் ஒன்றால் ஐந்து வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. குறித்த ஐந்து வீடுகளையும் கட்டிமுடித்த பிற்பாடு, அங்குள்ள பிரதேச செயலாளர் அந்த வீடுகளை அரசுடைமையாக்க வேண்டும் என்று வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அந்தப் பிரதேச மக்களுக்கு நீதிமன்றம் சென்று போராடுமளவுக்கு வசதியில்லை. ஆகையால், பிரதேச செயலாளருக்குச் சாதகமாக ஐந்து வீடுகளையும் அரசுடைமையாக்கி ஒருதலைப்பட்சமாக தீர்ப்பளித்திருக்கிறார்கள். எவ்வளவு கேவலமான விடயம் இது? அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் ராமேஷ்வரன் எம்.பிக்கும் இது சம்பந்தமாக நான் கடிதம் அனுப்பியிருக்கின்றேன். தொலைபேசி ஊடாகவும் பலமுறை இந்த விடயம் தொடர்பில் பேசியிருக்கின்றேன். ஆனால், இந்த விடயத்தில் இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நுவரெலியா மாவட்டத்தில், காலம் காலமாக அவர்கள் உங்களுக்குத்தான் வாக்களிக்கின்றார்கள்.

எனவே, இவ்வாறான மோசமான வேலைகளை செய்வதை அனுமதிக்காதீர்கள். அடுத்துவரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து, மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த வீடுகள் அமைந்துள்ள காணியை பள்ளிவாசலுக்கு எழுதிக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் ஜீவனிடமும், ராமேஷ்வரன் எம்.பியிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன். அதேபோன்று, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடமும் இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், மஹர சிறைச்சாலை வளாகத்தில் 100 வருட காலத்துக்கும் மேற்பட்ட வரலாறு கொண்ட பள்ளிவாசலை மூடிவைத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக நாங்கள் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கின்றோம். ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருக்கின்றோம். நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் பலமுறை எடுத்துரைத்துள்ளோம். இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இவ்வாறான பல பிரச்சினைகளை எமது சமூகத்தினர் எதிர்நோக்குகின்றனர். எனவே, இந்த விடயங்களில் கவனம் செலுத்தி, இவற்றுக்கான தீர்வுகளை மிகவும் துரிதமாகக் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று பொறுப்பான அதிகாரிகளிடமும் அமைச்சர்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன். - என்றார். (05)

# கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலய வித்தியாரம்ப விழா





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் 2024 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களுக்கான ஏடு தொடக்க விழா நேற்று (வியாழக்கிழமை) பாடசாலை பகுதி தலைவர் டி.கே .எம். மௌஸீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம் றிசாத் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கல்முனை சபா கோல்ட் ஹவுஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஃப். எம். சகி, 'டே நைட் 'பென்சி ஹவுஸ் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ. எம். சிறாஜ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் தரம் இரண்டு மாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன் அதிதிகளால் புதிய மாணவர்களுக்கும் கிரீடம் அணிவித்தும், இனிப்பு பொதிகளும் வழங்கி, ஏடு தொடக்கி வைத்துக் கௌரவிக்கப்பட்டனர். மேலும் வருகை தந்த கௌரவ அதிதிகளினால் புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் பாடசாலையின் பிரதியதிபர் எம்.ரீ.ஏ. மனாப், பாடசாலையின் பகுதித் தலைவர்கள், அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள் , ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# வவுனியாவில் பிரதேச செயலக பிரிவில் 1728 தாய்மாருக்கு பால் மா பொதிகள்




வவுனியா பிரதேச செயலக பிரிவில் 1728 தாய்மாருக்கு பால் மா பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பால்மா பொதிகள் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குப்பட்ட 1728 தாய்மார்களுக்கு இரண்டு பால்மா பொதிகள் வீதம் 3456 பால்மா பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வவுனியா தாண்டிக்குளம் கிராமசேவகர் பிரிவில் உள்ள 36 பேருக்கு பால் மா பொதிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கிராம சேவையாளர் ஜெ.மரினா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஞானேஸ்வரன் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05-100)

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு மாதத்தில் நாடாளுமன்றத்துக்கு புதிய கடற்றொழில் வரைவு வருமாம்!

## உலக உணவு மற்றும் விவசாய அமைப்பிடம் டக்ளஸ் உறுதி









கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஐ.நா. உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதி பணிப்பாளர் நாயகம் மனுவேல் பராங்கே தலைமையிலான பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று கடற்றொழில் அமைச்சில் நேற்று (வியாழக்கிழமை)இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் -

இலங்கை கடற்றொழில் சமூகத்தை சர்வதேச மட்டத்தில் உயர்த்துவதற்காக உணவு மற்றும் விவசாய அமைப்பின்

உதவியுடன் உருவாக்கப்பட்டு வரும் தற்போது வரைவு மட்டத்திலுள்ள புதிய கடற்றொழில் சட்டத்தை ஒரு மாதத்திற்குள் கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களை உள் வாங்கி அமைச்சரவையின் அனுமதியுடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தை தயாரிப்பதற்கு உணவு மற்றும் விவசாய அமைப்பு தரப்பில் வழங்கப்பட்ட உதவிகளுக்கு தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை கடற்றொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் எமது அறுவடைக்குப் பின்னரான பதிப்புகளைத் தடுப்பதற்கும் எமது நாட்டின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவி மற்றும் ஆலோசனை தேவைப்படுவதாகவும்

சுட்டிக்காட்டிய அமைச்சர் குறிப்பாக எதிர்காலத்தில் மீன்வளம் அழிவடையும் அபாயம் இருப்பதால் கூடுகளில் மீன்களை வளர்ப்பதற்கான உதவிகளை செய்து தருமாறும் இது உலகெங்கும் நடைமுறையில் உள்ள விடயம் என்பதால் மோதா போன்ற மீன் இனங்களை வளர்ப்பதற்கு உதவி புரியுமாறும் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் நடவடிக்கைகள் காரணமாக இலங்கை மீனவர்களுக்கு கடும் பாதிப்புகள் ஏற்படுகின்றன எனவும் தெரிவித்த அமைச்சர் தற்போது எமது நாடு

எதிர் நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்து மீட்சிபெறும் வரை கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதன் போது உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதி பணிப்பாளர் நாயகம் மனுவேல் பராங்கே கருத்து தெரிவிக்கையில் -

அமைச்சரால் முன்வைக்கப்பட்ட அனைத்து கோரிகைகள் தொடர்பாக தமது அமைப்பு சாதகமாக பரிசீலிக்குமெனவும் இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது தொடர்பில் தமது அமைப்பு சாதகமாக பரிசீலனை செய்யுமெனவும் புதிய

கடற்றொழில் வரைவை உருவாக்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் , அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய அர்ப்பணிப்பை தாம் பெரிதும் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நயனா குமாரி சோமரத்ன உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதிகள், கடற்றொழில் அமைச்சின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)

## மக்கள் சேவை மன்றத்தால் வறுமைக் கோட்டின் கீழுள்ள பயனாளிகளுக்கு வீடு நிர்மாண உதவிகள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)



திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 25 பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகள் நிர்மாணிப்புக்கான முதற்கட்ட காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் திருகோணமலை கிளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

சிலி நாட்டைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச தொண்டு நிறுவனமான செலவினப் பவுன்டேஷன் மற்றும் வன்னி ஹோப் நிறுவனங்களின் நிதி அனுசரணையில் திருகோணமலை மற்றும் வாகரைப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள நிரந்தர வீடுகளுக்கான முதற்கட்ட காசோலைகள் குறித்த பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.

யுத்தம் மற்றும் இயற்கைப் பேரழிவு காரணமாக நிரந்தர வீடுகள் இன்றி கஷ்டப்பட்டு ஓலைக் குடிசைகளில் மிக நீண்டகாலமாக வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கே மேற்படி வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கிவைக்கப்பட்டது. இந்த வீட்டுத் திட்ட உதவிகள் தமிழ், முஸ்லிம், சிங்கள இனம் என்ற பாகுபாடின்றி நீண்டகால வீட்டுத் தேவையுடைய அதிக குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட நாளாந்தக் கூலித் தொழில் செய்து வீடுகள் நிர்மாணிக்க வசதியற்ற குடும்பங்களுக்கே இந்த உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளது. தலா சுமார் 10 இலட்சம் பெறுமதி கொண்ட இந்த வீடு நிர்மாணிப்பு பணிகளுக்கு செலவிப் பவுண்ஷேன் 60 வீத நிதியினையும், வன்னி ஹோப் நிறுவனம் 30 வீத நிதியினையும் 10 வீத நிதியினை பயனாளிகளின் பங்களிப்புகளில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சு செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளரும் கிழக்கு மாகாணஆளுநரின் இணைப்புச் செயலாளருமான ஏ.எஸ்.எம். பாயிஸ் அவர்களும், சிறப்பு அதிதியாக திருகோணமலை மாவட்ட சிவில் சமூக அமைப்புகள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ரவீச்சந்திரன் அவர்களும் கலந்து சிப்பித்ததுடன் மக்கள் சேவை மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அதன் உத்தியோகத்தர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டர் என்பது குறிப்பிடத்தககது. (05)

## தாருல் உலூம் ஆரம்ப பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை வலயத்திற்குப்பட்ட தாருல் உலூம் ஆரம்பப் பாடசாலையின் மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளுக்காகவும், தங்குவதற்கு வகுப்பறைக்கான தளபாட வசதிகள் இன்றி காணப்பட்டது.

குறித்த பாடசாலையின் அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க 40 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்ட உயர்தர வகுப்பறை தளபாடங்கள் மேசை, நாற்காலிகள் உள்ளிட்டவை அதிபர் கலீல் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (05)

## காட்டு யானை அட்டகாசம் தென்னைச் செய்கை நாசம்





காட்டு யானைகளில் அட்டகாசத்தால் தொடர்ச்சியாக தென்னைச் செய்கை பேரழிவு ஏற்படுத்தப்பட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு நாச்சுக்குடா பகுதியில் புதன்கிமை இரவு மக்கள் குடியிருப்புக்குல் புகுந்த காட்டுயானை 10 இற்கு மேற்பட்ட தென்னைமரங்களை அழித்துச்சென்றுள்ளதாகவும் தொடர்ச்சியாகப் பல வருட காலமாக காட்டு யானைகள் பெரும்போக அறுவடை முடிந்த பின்னர் மக்கள் குடியிருப்புகளில் மக்கள் வாழ்வாதாரத்திற்காக வைக்கப்பட்டு உள்ள பலன் தரக்கூடிய நிலையில் உள்ள தென்னைகளை நாளாந்தம் வந்து அளித்து வருவதாகவும் இதன் காரணமாக இரவுவேலைகளில் நித்திரை இன்றி யானைகளுக்காக காவல் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இப்பகுதியில் மின்சார வேலி அமைப்பதற்காக பொருள்கள் போடப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையில் மின்சார வேலி அமைக்கப்பதற்கான உபகரணங்கள் கொண்டுவந்து இதுவரையில் அமைக்கப்படாது கிடப்பில்போடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் மின்சார வேலையை உரிய நேரத்தில் அமைத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் எனவும் இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரையான காலப்பகுதியில் எவருக்குமே யானையால் ஏற்பட்ட இழப்புக்கான இழப்பீடு வழங்கப்படவில்லை எனவும் இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் பலருக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமது தற்காலிக பாதுகாப்புக்காக யானை வெடியாவது தமக்கு தந்துதவுமாறு கேட்டு வேண்டி நிற்கின்றனர். (05)

## 5 வருடங்களில் 67 யானைகள் வவுனியா மாவட்டத்தில் சாவு



வவுனியா மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 வரை 67 யானைகள் பலியாகியுள்ளன என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா உட்பட வனத்தை அன்மித்த பகுதிகளிலில் அனுமதியற்ற சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கியும், வெங்காய வெடி, துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியும் (சட்டவிரோத துப்பாக்கி) ரயில் விபத்துக்களாலும் இவை பலியாகியுள்ளன.

மேலும் 5 வயது தொடக்கம் 40 வயதுடைய யானைகளே இவ்வாறு பலியாகியுள்ளன.

இதேவேளை இவ்வருடம் இதுவரை 3 யானைகள் பலியானதுடன், கடந்த வருடம் 17 யானைகள் வரை பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05-100)

# ஜனாஸாக்களை எரிக்கத் தீர்மானம் எடுத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்!

## ஹரீஸ் எம்.பி நாடாளுமன்றத்தில் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கொரோனா தொற்றுக்காலத்தில் முஸ்லிம்களின் மார்க்க ஒழுங்கின்படி நல்லடக்கம் செய்ய வேண்டிய ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. உலகின் சகல பாகங்களிலும் அந்தக் காலத்தில் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுக்கொண்டிந்தபோது இலங்கையில் மட்டும் இந்த ஜனாஸாக்களை எரிக்கத் தீர்மானம் எடுத்த சுகாதார அமைச்சின் அதிகாரிகள், அரச உயர்மட்டத்தினர், பின்னணியில் இருந்தவர்களை குற்றப்புலனாய்வு பிரிவினரை கொண்டு விசாரணை செய்து இப்படியான தீர்மானம் எடுத்தமைக்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். அத்துடன் நமது நாட்டின் விடுதலைக்காக, சுதந்திரம் பெறுவதற்காகப் பலரும் உயிர்த்தியாகம் செய்து சிறைகளில் வாடி ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடினார்கள். அதில் சிலர் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் தேசத்துரோகிகளாகவும் அறிவிக்கப்பட்டார்கள். என்னுடைய கல்முனை தொகுதியிலேயே ஈஸா அனீஸ் லெப்பை, காரியப்பர் போன்றவர்கள்



உட்பட இன்னும் ஐந்து சகோதரர்கள் அவர்களால் துரோகிகளாக அறிவிக்கப்பட்டிருந்தனர்.

இதில் சிலரை மட்டும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன துரோகிகள் பட்டியலில் இருந்து விடுவித்து தேசப்பற்றாளர்களாக அரச வர்த்தமானியில் அறிவித்திருந்தார். அதில் இந்த ஏழு முஸ்லிம் சகோதரர்களும் உள்ளடக்கப்படவில்லை. நாம் எல்லோரும் நமது தேசத்தின் மேம்பாட்டுக்காகப்பாடுபடும் இந்த சூழ்நிலையில் இந்த விடயத்தையும் ஜனாதிபதியும், அரசாங்கமும் கவனத்தில் எடுத்து இந்த ஏழு சகோதரர்களையும் துரோகிகள் பட்டியலில் இருந்து நீக்கி தேசப்பற்றாளர்களாக அறிவித்து வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.- என்றார். (05)

# மின்சார சபை ஊடக பேச்சாளர் கருத்துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் கண்டனம்

## அவர் பதவி விலகியுள்ளார் என்கிறார் காஞ்சன

அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட சமூக செயற்பாட்டாளர்களிடமிருந்து எழுந்த கடும் எதிர்ப்பையடுத்து இலங்கை மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் அப்பதவியில் இருந்து விலகியுள்ளார்.

'அவரின் கருத்து இலங்கை மின்சார சபையினதோ அல்லது அரசாங்கத்தினதோ, அமைச்சினதோ கருத்து அல்ல. அவர் வெளிப்படுத்திய கருத்துக்காக மன்னிப்பு கோருகின்றேன். ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து அவர் விலகியுள்ளார்.' -என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் ஊடக பேச்சாளரின் கருத்தை அமைச்சர் ஜீவன் தொண்டமான், வன்மையாகக் கண்டித்ததுடன், அது ஏற்றுக்கொள்ள முடியாதது என தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், இவர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் காஞ்சனவிடம் வலியுறுத்தி இருந்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர், ஊடகப்பேச்சாளர் பதவியில் இருந்து அவர் விலகிவிட்டதாகவும், மன்னிப்பு கோருவதாகவும் அறிவித்துள்ளார். (05)

# பாடசாலை கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் மாணவர் வரவேற்பு வைபவம்





(மூதூர் நிருபர்)

மூதூர் கல்வி வலயத்திற்குட்பட்ட தி/மூ/ புர்கானியா வித்தியாலயத்தில் பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சி கரமான ஆரம்பம் எனும் தொனிப்பொருளில் தரம் 1 இற்குப் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளுவதற்கான ஆரம்ப வரவேற்பு விழா பாடசாலை அதிபர் ஏ.எச்.இம்ராம் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) சிறப்பாக நடைபெற்றது. இதில் மூதூர் வலயக்கல்வி அலுவலக ஈபிஎஸ்ஐ இணைப்பாளர் ரீ.எம்.இம்தியாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்., கிராம சேவையாளர் ஜலீஸ் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டனர் இந் நிகழ்வுகளில் இன்னும் பலரும் கலந்துகொண்டனர். (05)





# மருதமுனை அல் - ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் வித்யாரம்ப விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை அல் - ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் வித்யாரம்ப விழா நிகழ்வு நேற்று(புதன்கிழமை) பாடசாலையின் அதிபர் எம்.எல்.எம். மஹ்றூப் தலைமையில் நடைபெற்றது.

இதில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். தரம் ஒன்று மாணவர்களின் முதல் நாளான இன்று பாடசாலைக்கு வருகை தந்த புதிய மாணவர்களை தரம் இரண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்றதுடன் புதிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை இப் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 16 மாணவர்கள் நினைவுச் சின்னங்கள் பதக்கங்கள் வழங்கப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

தரம் 5 இல் கல்வி கற்ற மாணவர்கள் நடத்தப்பட்ட ஸ்பெல் மாஸ்டர் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்று அதிகூடிய புள்ளிகளை பெற்றுக் கொண்ட மாணவர்களும் இந்த நிகழ்வின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

இதில் கல்முனை வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால், மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எம்.ஹிர்பகன், பிரதி அதிபர் எம்.பி. அஹமட் ராஜி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் சுப்பர் சென்டர் உரிமையாளர் ஏ.எஸ். எம்.அஸாம், புறகான்ஸ் சைக்கிள் கோணர் உரிமையாளர் எம்.ரி.அஹமட் பாஹிம் பாடசாலையின் அபிமானிகள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# மூதூர் சண்பகவல்லி வித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் விழா



(கிண்ணியா நிருபர்)

மூதூர் சண்பகவல்லி வித்தியாலயத்தில் தரம் - 01 மாணவர்களை வரவேற்கும் விழா நேற்று(வியாழக்கிழமை) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கே.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டு அதிகாரி எஸ்.எம்.நௌபர் கலந்து கொண்டார்.

அத்தோடு பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோத்தர், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியை, பொலிஸ் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05)

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலை வித்தியாரம்ப விழா









(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா நேற்று (வியாழக்கிழமை) கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் சிஹாப் ஆகில், இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எம்.என்.எப். ரக்ஸா ஆஸ்மி, பாடசாலையின் பழைய மாணவரும் அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளருமான எம்.ஐ.எம்.ரியாஸ், ஆரம்ப கல்வி வளவாளர் எஸ்.எம்.எம். அன்ஸார் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றப்பட்டதோடு, தரம் இரண்டு மாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

பிரதி அதிபர், உதவி அதிபர் உட்பட பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் முதலாம் தரத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் நிகழ்வை மேலும் மெருகூட்டின. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.02.2024இல் வெளியிடப்பெற்றது.